**வேலூர் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலரின் செயல்முறைகள்**
**ந.க.எண்.3451/ஆ5/2024, நாள்.04/02/2025**

•••••

பொருள் பள்ளிக் கல்வி – 2024–2025ஆம் கல்வியாண்டு கல்வி இணை / கல்வி சாரா மன்றச் செயல்பாடுகள் – சிறார் திரைப்படங்களுக்கான பள்ளி மற்றும் வட்டார அளவிலான போட்டிகள் நடத்துதல் – வழிகாட்டு நெறிமுறைகள் – சார்ந்து

பார்வை

1. தமிழ்நாடு பள்ளிக் கலவி ஆணையர் மாநில மற்றும் தொடக்கக் இயக்குநரின் இணை செயல்முறைகள் ந.க.எண்.34785/எம்/இ1/2022, நாள்.19.05.2023, 06.12.2023
2. தமிழ்நாடு பள்ளிக் கல்வி இயக்குநரின் செயல்முறைகள் ந.க.எண்.34785/எம்/இ1/ 2023, நாள். .04.01.2024
3. சென்னை – 6, தமிழ்நாடு பள்ளிக் கல்வி இயக்குநரின் செயல்முறைகள் ந.க.எண்.34785/எம்/இ1/2023, நாள்.08.01.2024
4. சென்னை – 6, தமிழ்நாடு பள்ளிக் கல்வி இயக்குநரின் செயல்முறைகள் ந.க.எண்.34785/எம்/இ1/2023, நாள்.03.02.2025

2024–2025ஆம் ஆண்டில் பார்வையில் காணும் செயல்முறைகளின்படி நவம்பர், டிசம்பர் மற்றும் ஜனவரி மாதங்களுக்கான சிறார் திரைப்படங்கள் 6 முதல் 9–ம் வகுப்பு வரை பயிலும் மாணவர்களுக்கு திரையிடப்பட்டுள்ளன. அதனை தொடர்ந்து சிறார் திரைப்படம் திரையிடல் சார்ந்த பள்ளி, வட்டாரம், மாவட்டம் மற்றும் மாநில அளவிலான போட்டிகளை நடத்திட திட்டமிடப்பட்டுள்ளது என தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதன் பொருட்டு, அரசுப் பள்ளிகளில் 6–ம் வகுப்பு முதல் 9–ம் வகுப்பு வரை பயிலும் அனைத்து மாணவர்களும் பங்கு பெறும் வகையில் எந்த ஒரு பள்ளியும் விடுபடாமல், பள்ளி அளவிலான போட்டிகளை அட்டவணை –1ல் குறிப்பிட்டுள்ளவாறு திட்டமிட்டு நடத்திட உரிய நடவடிக்கை மேற்கொள்ளுமாறு அனைத்து அரசு பள்ளித் தலைமையாசிரியர்களுக்கு தெரிவிக்கப்படுகிறது.

மேலும், வட்டாரம் மற்றம் மாவட்ட அளவிலான போட்டிகளை நடத்திடுவதற்கான வழிகாட்டு நெறிமுறைகள் பின்னர் தெரிவிக்கப்படும். பள்ளி அளிவல், வட்டார அளவில் மற்றும் மாவட்ட அளிவல் போட்டிகளை கீழே குறிப்பிட்டுள்ளவாறு திட்டமிட்டு நடத்திட தெரிவிக்கப்பட்டுள்ளது. போட்டிகள் குறித்த விவரத்தினை போட்டி நடக்கும் தேதிக்கு முந்தைய தினத்தன்று மட்டுமே மாணவர்களுக்கு தெரிவித்தல் வேண்டும். எக்காரணம் கொண்டும் முன்னதாக தெரிவித்தல் கூடாது.

| **போட்டிகளின் நிலை** | **EMIS தளத்தில் பங்கேற்பாளர் விவரங்கள் உள்ளீடு செய்தல்** | **போட்டிகள் நடைபெறும் தேதி** | **EMIS தளத்தில் வெற்றியாளர்களின் விவரங்களை பதிவேற்றம் செய்ய வேண்டிய கடைசி நாள்** |
|---|---|---|---|
| பள்ளி அளவிலான போட்டிகள் | 05.02.2025 | 07.02.2025 | 10.02.2025 |
| வட்டார அளவிலான போட்டிகள் | | 13.02.2025 | 14.02.2025 |
| மாவட்ட அளவிலின போட்டிகள் | | 20.02.2025 | 21.02.2025 |

அட்டவணை – 1 சிறார் திரைப்படம் திரையிடல் போட்டிகள் (School Level Competitions)

| வ. எண். | போட்டிகள் | கால அளவு | மதிப்பெண்கள் வழங்குவதற்கான கூறுகள் | | | |
|---|---|---|---|---|---|---|
| 1 | கதை மற்றும் வசனம் | | | | | |
| | சிறப்பு கவனம் தேவைப்படும் குழந்தைகளுக்கான உள்ளடக்கிய கல்வி குறித்து 3 நிமிட படத்திற்கான கதை மற்றும் வசனம் எழுதுதல் | 45 நிமிடங்கள் | திரைப்படத்தின் கருப்பொருள் மற்றும் பொருளடக்கம் (30 மதிப்பெண்களா) | கதை மாந்தர்களை உருவாக்குதல் மற்றும் வளர்த்தல் (25 மதிப்பெண்கள்) | கதையோட்டம் (20 மதிப்பெண்கள்) | வசன நேரத்தி (25 மதிப்பெண்கள்) |
| 2 | ஒளிப்பதிவு | | | | | |
| | இயற்கை பாதுகாப்பு குறித்து 2 நிமிட திரைப்படக் கதையை உருவாக்குதல் | 1 மணி 30 நிமிடங்கள் ஒளிப்பதிவு செய்யப்பட்ட விஷயங்களை எடிட் செய்து, இசை சேர்த்து (தேவைப்பட்டால் மட்டும்) கொடுக்கப்பட்டுள்ள ஒன்றரை மணி நேரங்களுக்குள் அனைத்தையும் முடிக்க வேண்டும் | காட்சித்தரம் (நிலையான சட்டகம் (Static Shot) ஓடும் சட்டகம் (Running Shot) ஜூம் உள்ளே (zoom–in) காசி திருப்பம் (Visual – Plan) (25 மதிப்பெண்கள்) | ஒளிப்பதிவிற்கான விளக்குகள் பயன்பாடு (இயற்கை – Natural, செயற்கை – Artificial, அறைகளில் – Room) (25 மதிப்பெண்கள்) | எப்படி கதை மற்றும் கருத்தை சொல்வது (25 மதிப்பெண்கள்) | ஒளிப்பதிவு கருவியின் கோணங்கள் வழியாக உணர்வுகளை கடத்துவது (விரிந்த (Wide angle) இடை (Mid angle) அருகில் (close–up) (25 மதிப்பெண்கள்) |
| 3 | நடிப்பு | | | | | |
| | பெனோஜிபைன் கதைக்கான பொருள் மற்றும் கதை மாந்தர்களோடு 3 நிமிடம் நடித்தல் | 45 நிமிடங்கள் (தனிநபராக நடிக்கினற் மாணவரோடு மற்ற நபர்கள் யார் நடித்தாலும் மதிப்பெண் தனிநபராக நடிக்கும் மாணவருக்கு மட்டும் வழங்கப்படும்) | உணர்வுகளை சிறப்பாக வெளிக் கொணர்தல் (30 மதிப்பெண்களா) | கதை மாந்தர்களை குறிப்பிடுவது (30 மதிப்பெண்கள்) | காட்சிகளுக்கு தகுந்தாற்போல் குரலை சரியாக பயன்படுத்துவது (20 மதிப்பெண்கள்) | இடத்தைசரியாக பயன்படுத்துவது கதாப்பாத்திரத்தை உணர்ந்து நடிப்பது (25 மதிப்பெண்கள்) |

அட்டவணை – 2 சிறார் திரைப்படம் திரையிடல் போட்டிகள்

| வ. எண். | போட்டிகள் | வழிகாட்டு நெறிமுறைகள் |
|---|---|---|
| 1 | கதை மற்றும் வசனம் | 1. தலைப்புக்குரிய கதையினை தேர்ந்தெடுக்க வேண்டும்<br>2. 3 நிமிடத்துக் குறிய கதையாய் இருக்க வேண்டும்<br>3. கதைக்கான சூழல் கதாபாத்திரங்கள் குறித்து புரிதல் வேண்டும்<br>4. கதாபாத்திரங்களின் உடையாடல்களை தெளிவுப்படுத்த வேண்டும் |
| 2 | ஒளிப்பதிவு | 1. எந்தக் காட்சி எப்பொது எடுக்கபடவேண்டும் கன்பதை திட்டமிடுவது<br>2. எந்தக் காட்சி மிக அவசியமானது என்பதை தெரிந்து எடுக்க வேண்டும்<br>3. எந்த நிகழ்வை அருகில், நீண்ட தொலைவில், மிக அருகில் , நடுவில் எது தேவையற்றது. (Long shot, Mid. Wide. Close–up) என்பதை எடுக்கும் போது முடிவு செய்யலாம்.<br>4. திரைப்படத்திற்கு தேவையான கட்டம், காட்சி, கோணம், நகர்வு (Shot. Scene. Angle. Movement) ஆகியவை தெரிந்திருந்தால் நல்லது<br>5. காலை, பகல், மாலை, இரவு இவைகளுக்கான வெளிச்சக்கூறுகள் தெரிந்திருத்தல் நலமே<br>6. கதையின் தொடர்ச்சிக்காக எடுக்கப்பட்ட காட்சிகளை கவனமாக தவறாமல் குறித்துக் கொள்ள வேண்டும்<br>7. எடுக்கபட வேண்டிய காட்சிக்கு தேவையான பொருட்களை கதாபாத்திரங்கள், உடை, ஒப்பனை ஆகியவை திட்டமிடப்படவேண்டும்.<br>8. காட்சிகளை ஆவணப்படமாக எடுக்க வேண்டும் |
| 3 | நடிப்பு | 1. கொடுக்கப்பட்டுள்ள தலைப்பை பொறுத்து தேவைப்பட்டால் நடிப்பதற்குரிய இடம் , பொருள்கள், நடிகர்கள் முன் கூட்டியே தேர்ந்தெடுக்கப்பட வேண்டும்.<br>2. அதற்கு தொடர்புடைய வசனங்கள் இருந்தால் தயார் நிலையில் இருக்க வேண்டும்.<br>3. உங்களுக்கு தரப்பட்டிருக்கும் நேரம் 45 நிமிடங்கள் இதில் 42 நிமிடங்கள் நடிப்பிற்கான தயாரிப்பிற்கு பயன்படுத்திக் கொள்ள வேண்டும். அடுத்துள்ள 3 நிமிடங்களுக்குள் நடிப்பை முடிக்க வேண்டும்.<br>கதையின் கருப்பொருள் மாறாமல் பார்த்துக்கொள்ள வேண்டும். |

மேலே குறிப்பிட்டுள்ள அனைத்து வழிகாட்டு நெறிமுறைகளையும் தவறாமல் பின்பற்றி சிறார் திரைப்படம் திரையிடல் சார்ந்த பள்ளி அளவிலான போட்டியினை நடத்தி அதன் விவரங்களை EMIS தளத்தில் குறிப்பிடப்பட்டுள்ள தேதிகுள் தவறாமல் பதிவேற்றம் செய்ய உரிய நடவடிக்கை மேற்கொள்ளுமாறு அனைத்து அரசு பள்ளித் தலைமையாசிரியர்களுக்கு தெரிவிக்கப்படுகிறது.

EMIS தளத்தில் குறிப்பிடப்பட்டுள்ள தேதிகுள் தவறாமல் பதிவேற்றம் செய்வதை உறுதிசெய்யுமாறு மாவட்டக் கல்வி அலுவலர்கள் (இடைநிலை / தொடக்கக் கல்வி அலுவலர்களுக்கு தெரிவிக்கப்படுகிறது.

இணைப்பு – பார்வை 4–ன் செயல்முறைகள்

முதன்மைக் கல்வி அலுவலர்,
வேலூர்.

பெறுநர் –

1. தலைமையாசிரியர்கள்,
   அரசு நடுநிலை / உயர் / மேல்நிலைப் பள்ளிகள், வேலூர் மாவட்டம்.
   (சார்ந்த மாவட்டக் கல்வி அலுவலர் மூலமாக)
2. மாவட்டக் கல்வி அலுவலர்கள்,
   (இடைநிலை / தொடக்கக்கல்வி) வேலூர் மாவட்டம்.
   (தொடர் நடவடிக்கை மேற்கொள்ளும் பொருட்டு)
   (இவ்வலுவலக மின்னஞ்சல் மூலமாக)

நகல்–

1. பள்ளிக் கல்வி இயக்குநர் அவர்களுக்கு தகவலுக்காக
   பணிந்து அனுப்பப்படுகிறது.
2. வட்டாரக் கல்வி அலுவலர்கள், வேலூர் மாவட்டம்.
   மாவட்டக் கல்வி அலுவலர் (தொடக்கக் கல்வி) மூலமாக
3. உதவி திட்ட அலுவலர்,
   ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வி, வேலூர் மாவட்டம்.
4. பள்ளித் துணை ஆய்வாளர்கள்
   (முதன்மைக் கல்வி அலுவலகம் / மாவட்டக் கல்வி அலுவலகம்)
   (உரிய நடவடிக்கை மேற்கொள்ளும் பொருட்டு சார்ந்த அலுவலர் மூலமாக)